# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**Date : 09.06.2026**

**OS No. : 208/2020**

**Dw : 1**

**Name : திரு. ஜாபர் சாதிக்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். இந்த வழக்கு குறித்த முழுவிவரமும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி எனது மனைவி என்றால் சரிதான். 3, 4 மைனர் பிரதிவாதிகள் என்னுடைய குழந்தைகள் என்றால் சரிதான். வாதி நவாஸ்கான் ஆரம்பத்தில் என் மீது மட்டும்தான் வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். கிரைய பாக்கி தொகையான ரூ.3 லட்சத்தை பெற்றுக்கொண்டு வாதியின் பெயருக்கு கிரையம் எழுதிக்கொடுக்கவேண்டும் என கோரி வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மாற்றுப்பரிகாரமாக வாதியிடம் 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்ட 12 லட்ச ரூபாய் பணத்தை 12 சதவீத வட்டியுடன் செலுத்த உத்தரவிடவேண்டும் என கோரியுள்ளார் என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ.1 பதிவுபெற்ற கிரைய ஒப்பந்த ஆவணத்தை வாதி, நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எனக்கு மேற்படி சொத்து ஏற்பாடு ஆவணம் வாயிலாக கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் அந்த அசல் ஆவணத்தையும் வாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 22.09.2020ம் தேதிய வழக்கறிஞர் அறிவிப்பை ஒரு ஆவணமாக வாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 15.10.2020ம் தேதிய

அஞ்சலக ஒப்புகை அட்டையை வாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் 20.10.2020 ம் தேதியில் வாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் நகலை வாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் எனக்கு ஏற்பாடு ஆவணம் எழுதி வைத்து அதன் வழியில் தபசில் சொத்து எனக்கு கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். 29.10.2019 ம் தேதி செங்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து வாதிக்கு நான் கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் சொத்தின் மதிப்பு ரூ.15 லட்சம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 29.10.2019 அன்று தென்காசி தனி மாவட்டமாக பிரிக்கப்படவில்லை என்றும், ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டத்தில்தான் இருந்தது என்றும் சொன்னால் சரிதான். கிரைய ஒப்பந்த ஆவணத்தில் அந்த தேதியில் 12 லட்ச ரூபாய் பணத்தை நான் பெற்றுக்கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாக்கி கிரைய தொகையான 3 லட்ச ரூபாய் பணத்தை ஒரு வருட காலத்திற்குள் வாதி என்னிடம் செலுத்தும் பட்சத்தில் நான் கிரையம் செய்து கொடுக்கவேண்டும் என ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் போட்ட ஒரு மாத காலத்தில் நான் மீண்டும் வாதியிடம் 1 லட்ச ரூபாயை கைமாற்றாக வாங்கினேன் என்றால் சரியல்ல. 22.09.2020 க்கு முன்னரே வாதி வேறு நபர்கள் மூலமாக கிரையம் முடிக்க என்னை அழைத்தார் என்று சொன்னால் சரியல்ல. வாதி என்னை எப்போதுமே கிரையம் முடித்து தரசொல்லி அழைக்கவில்லை. அவ்வாறு எந்த நோட்டீசும் எனக்கு அனுப்பவில்லை. 22.09.2020 அன்று வாதி எனக்கு வழக்கறிஞர் மூலமாக நோட்டீஸ் அனுப்பினார் என்று சொன்னால் சரியல்ல. வாதிதான் என்னிடம் பணம் கேட்டிருந்தார், ஆனால் அதற்கு எந்தவொரு ஆதரவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3) 19.10.2020 அன்று காலை 10.00 மணிக்கு கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்றும் வகையில் பாக்கி தொகையான 3 லட்ச ரூபாயை செலுத்த தான்

தயாராக உள்ளதாக வாதி 15.10.2020 ம் தேதி ஒரு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. அந்த அறிவிப்பை 16.10.2020 அன்று நான் பெற்றுக்கொண்டு 19.10.2020 அன்று நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல, ஆனால் மேற்படி அறிவிப்பை நான் பெற்றுள்ளேன். 20.10.2020 அன்று நான் வாதிக்கு ஒரு பதிலறிவிப்பு அனுப்பினேன் என்று சொன்னால் சரிதான். வாதியிடம் நான் வட்டிக்குத்தான் பணம் வாங்கினேன் என்று பதிலளித்தேன். கிரைய ஒப்பந்த ஆவணத்தில் கையொப்பமிடவேண்டும் என என்னை யாரும் சார்பதிவாளர் அலுவலகத்தில்வைத்து நிர்பந்திக்கவில்லை, ஆனால் வட்டிக்கு பணம் வாங்கும்போது இவ்வாறு எழுதி வாங்கிக்கொள்வதுதான் நடைமுறை என்று வாதி என்னிடம் சொன்னார். நான் கொடுத்த பதிலறிவிப்பில் 30,000/– ஐ எடுத்துக்கொண்டு ரூ.9,70,000/– மட்டுமே வாதி என்னிடம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வாதி என்னிடம் அநியாய வட்டி கேட்பதாகவோ, என்னை ஏமாற்றுவதாகவோ காவல்நிலையத்தில் நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாதி வட்டிக்கு கொடுக்கும்நபர் என்பதை யார் மூலமாக நான் தெரிந்துகொண்டேன் என்றால் வாதி ஒரு பிரபலமான நபர் என்பதால் இயல்பாகவே எனக்கும் அந்த விவரம் தெரியும். வாதி வட்டிக்கு கொடுத்த வேறு இடங்களில் பிரச்சனை ஏற்பட்டு நீதிமன்றத்திலோ, காவல்நிலையத்திலோ புகார் தாக்கல் செய்யப்பட்டள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி தீவிர மதப்பற்று உடையவர் என்றும், வட்டிக்கு கொடுப்பதை அவர் எந்த காலத்திலும் செய்துவந்ததில்லை என்றும், எனக்கு சொந்தமான தபசில் சொத்தை கிரையம் வாங்கும் நோக்கத்தில்தான் கிரைய முன்பணம் கொடுத்து ஒப்பந்தம் போடப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வாதி 30,000/– ரூபாய் எடுத்துக்கொண்டு ரூ.9,70,000/– மட்டுமே கொடுத்தார் என்பதற்கு எந்த ஒரு ஆதரவும் என்னால் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பத்து லட்ச ரூபாய் கொடுக்கும்போது வாதியின் வீட்டில் அவரும்,

அவருடைய மனைவி மட்டுமே உடன் இருந்தார்கள்.

4) நான் பிசியோதெரபிஸ்ட் என்பதால் எந்த நேரமும் எனக்கு வேலை இருக்கும் என்றும், வெளிநபர்கள் அழைக்கும்பட்சத்தில் அங்கு சிகிச்சைக்கு செல்வேன் என்றால் சரிதான். கொரோனா காலக்கட்டத்தில் வெளிநபர்களுக்கு சிகிச்சை அளிக்க நான் அனுமதி பெற்றிருந்தேன் என்றால் இல்லை. வாதிக்கு செலுத்தியதாக சொல்லும் வட்டித்தொகை பல்வேறு தவணைகளில் சிறுசிறு தொகையான செலுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால், வாதிதான் அவ்வாறு செலுத்தும்படி என்னை அறிவுறுத்தினார். எனது மனைவியின் பேறுகால சிகிச்சை செலவுகளுக்காக 1 லட்ச ரூபாய் நான் கைமாற்றாக வாதியிடம் பெற்றேன் என்றும், அந்த தொகையை பல்வேறு தவணைகளாக நான் மீண்டும் செலுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி கிரைய பாக்கி தொகையான 3 லட்ச ரூபாயை உடனடியாக கொடுத்து கிரையம் முடிக்க தயாராக இருந்தார் என்றும், நான்தான் என்னுடைய மனைவியின் பிரசவத்தை காரணம் காட்டி அதை தள்ளிப்போட்டுவந்தேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய கஷ்டத்தை உணர்ந்த வாதி 1 லட்ச ரூபாய் பணத்தை சிறு சிறு தவணைகளாக செலுத்துவதற்கு என்னை அனுமதித்தார் என்று சொன்னால் சரியல்ல.

5) வாதி வழக்கு தாக்கல் செய்தவுடன் நான் என்னுடைய எதிர்வழக்குரையை தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரிதான். வழக்கு விசாரணையின்போது வாதியை நான் குறுக்கு விசாரணை செய்யாத காரணத்தினால் எனக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் வழக்கறிஞரை தொடர்பு கொள்ள முடியாத நிலையில் இருந்ததால் வாதியை அப்போது என்னால் குறுக்குவிசாரணை செய்யமுடியவில்லை. அப்போது நான் சென்னையில் இருந்தேன். தற்போது நான் தாக்கல் செய்துள்ள எனது நிரூபண வாக்குமூலத்தில் நான் கேரளாவில் இருந்ததாகவும், உடல்நிலை காரணமாக என்னால் உரிய நேரத்தில் வழக்கு விசாரணைக்கு வரமுடியவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளேன் என்றால்

சரிதான். இந்த வழக்கில் தீர்ப்பு பிறப்பிக்கப்படும் நேரத்தில் என்னுடைய மனைவியை நீதிமன்றத்தில் ஆஜராகி கட்சி செய்யுமாறு அறிவுறுத்தியது நான்தான் என்றால் சரியல்ல. வழக்கு விசாரணையை காலதாமதம் செய்யும் நோக்கத்தில் அவசியமற்ற கட்சியான என்னுடைய மனைவி மூலமாக ஒரு மனு தாக்கல் செய்து, அதன்படி அவர்களை புதிதாக கட்சி சேர்த்து மேலும் காலதாமதம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய மனைவி, எனது கணவர் ஒரு மோசடி பேர்வழி என்றும், எனக்கு ஜீவனாம்சம் கொடுக்காமல் தவிர்ப்பதற்காக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதிக்கு தபசில் சொத்தை கிரையம் கொடுக்கக்கூடாது என்ற ஒரே நோக்கத்தில் வழக்கு முடிவு வரக்கூடாது என்பதற்காக பல்வேறு வழிமுறைகளை கையாண்டு வீணாக காலதாமதத்தை ஏற்படுத்துகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

6) இந்த வழக்கு என்ன நிலையில் உள்ளது என்பதை எவ்வாறு தெரிந்துகொண்டேன் என்றால் என் வழக்கறிஞரை தொடர்புகொண்டு கேட்டபோது தெரிந்துகொண்டேன். நானும் என் மனைவியும் ஒற்றுமையாகத்தான் உள்ளோம் என்றும், கூட்டுசதி செய்து வாதிக்கு தபசில் சொத்தைகிரையம் கொடுக்கக்கூடாது என்பதற்காக வீண்வம்பாக கட்சிசெய்துவருகிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

என்னுடைய முதல் குழந்தை 2007ம் வருடம் பிறந்தது. என்னுடைய 2வது குழந்தை 29.03.2014 அன்று பிறந்தது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதிக்கு என்னுடைய குடும்ப சூழ்நிலை மற்றும் குடும்பம் பற்றி விவரங்கள் தெரியுமா என்றால் தெரிந்திருக்க வாய்ப்புண்டு. வாதியிடம் பேறுகால சிகிச்சைக்கு பணம் தேவை என பொய்யாக ஒரு காரணம் சொல்லி 1 லட்ச

**ரூபாய் பணத்தை நான் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi